**வத்தளை மாபோல நகர சபை - 2022**
**----------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வத்தளை மாபோல நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 181(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, வத்தளை மாபோல நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சல் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களின் படி 4 கணக்கு விடய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 173,875,104 தொகை எனினும் அட்டவணையின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 170,456,053 தொகையாக இருந்தமையால் ரூபா 3,419,051 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சரி செய்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை அல்லது அட்டவணைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நூலகப் புத்தகங்கள் கொள்வனவு செய்யும் போது கிடைத்திருந்த ரூபா 74,556 தொகையினை கணக்கீடு செய்யப்படாமையால் கணக்குகள் மற்றும் அட்டவணைகள் இடையே அதே அளவான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | நூலகத்தின் ஆண்டிற்கான பெறுமதி என சேர்வுப் பதிவேட்டிற்கு ஆண்டின் போது உட்படுத்தப்பட்ட புத்தகங்களாக காணப்பட்டதுடன் பெறுவனவுகள் என பணமாக செலுத்தப்பட்ட மற்றும் அவ் ஆண்டின் போது பணமாக செலுத்தப்படாத நூலகத்திற்கு கிடைத்திருந்த புத்தகங்கள் ஆகும் என. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இனங்கண்டு கணக்குகள் சரிசெய்யப்பட வேண்டும். |

### 1.6.2 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் திருத்திய நிதிக்கூற்றுக்களில் நடைமுறை சொத்துக்களின் கீழ் ரூபா 8,150,079 இற்கான தீர்க்கப்படாத தொங்கல் மீதியொன்று காணப்பட்டது. | பதில் அளிக்கப்படவில்லை. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கா எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 92,229,387 தொகை பெறுமதியான 6 கணக்கு மீதிகள் பதிவேடுகள் மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாமையால் திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது, | புதிய படிவத்தின் படி எதிர்காலத்தில் ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றது எனவும் மற்றும் காலப் பகுப்பாய்வு எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும். | பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு பேணிச் செல்ல வேண்டியதுடன் காலப் பகுப்பாய்வும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த திருத்திய நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 74,202,464 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 48,496,019 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீதவரி மற்றும் வரி | 57,544 | 57,407 | 48,402 | 62,063 | 56,592 | 58,038 | 49,312 | 56,692 |
| வாடகை | 16,733 | 21,182 | 22,068 | 16,784 | 18,548 | 15,773 | 13,307 | 14,753 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,797 | 1,129 | 1,958 | - | 2,212 | 912 | 1,364 | - |
| ஏனைய வருமானங்கள் | 103,231 | - | 89,702 | - | 188,433 | - | 136,334 | - |
| | 179,305 | 79,718 | 162,130 | 78,847 | 265,885 | 74,723 | 200,317 | 71,445 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | **வீதவரி மற்றும் வரி** | | |
| (அ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ரூபா 55,807,222 இற்கான நிலுவை வீதவரி மீதியில் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவீடு செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 11,517,132 தொகையாக காணப்பட்டமையால் அறவீடுகளின் விகிதாசாரம் 21 சதவீதமாகும். | நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு குப்பை அகற்றல் கட்டண மீதி ரூபா 8,461,376 தொகையாக இருந்தது. | பதிவேடுகளில் காணப்படும் பிழைகளை சரிசெய்வதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் மீதியான நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | துணை விதிகளின் படி நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | **வாடகை** | | |
| | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வர்த்தக நிலைய வாடகை மற்றும் வீட்டு வாடகை நிலுவைத் தொகை என ரூபா 16,835,859 தொகை காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 6,385,068 தொகை அதாவது 38 சதவீதம் 5 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்படுகின்ற மீதியொன்றாக இருந்தது. | ரூபா 2,780,966 தொகைக்காக வழக்குத் தாக்கல் செய்யும் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளதுடன் மீதி நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | கணக்குகளின் படி நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காணி கணிப்பீட்டின் போது இனங்கண்டிருந்த சபைக்கு சொந்தமான இரண்டு காணிகள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதியும் போது ஏற்பட்டிருந்த வழு, அட்டவணைகளில் குறைபாடுபாடுகள் காரணமாக இந்த வித்தியாசம் ஏற்பட்டிருந்தது என. | பதிவேடுகள் நாளதுவரை ஆக்கப்பட்டு சரியாக பெறுமதி உட்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | முத்திரைக் கட்டண வருமானத்தில் இருந்து கொடுப்பனவு செய்வதற்காக சபைக்கு உள்ளூராட்சி | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட தரப்பினருடன் உடன்படிக்கை ஒன்று அல்லது இணக்கப்பாடு |

| | | |
|---|---|---|
| ஆணையாளரினால் கம்பெக்டர் வண்டி ஒன்று வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு ஆரம்பத்தில் அதற்காக செலுத்த வேண்டியிருந்த ரூபா 6,774,000 இற்கான மீதியொன்று காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது முத்திரைக் கட்டண வருமானத்திலிருந்து அந்த வண்டிக்காக கூட்டுத்தொகை ரூபா 6,840,000 இற்கான தவணைப் பணங்கள் அறவீடு செய்யப்பட்டு இருந்ததுடன், அதன்படி ரூபா 66,000 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. அந்த வண்டி வழங்கப்பட்டது தொடர்பாக தவணைப் பணங்கள் அறவீடு செய்யும் செய்முறை அல்லது வேறு ஏதேனும் நிபந்தனை ஒன்று தொடர்பாக குறிப்பிட்ட தரப்பினருடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்வதற்கு அல்லது இணக்கப்பாடு ஒன்று ஏற்படுத்திக் கொண்டிருக்கவில்லை. | | ஒன்று ஏற்படுத்திக் கொண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) நகர சபையிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த உத்தியோத்தர்கள் 7 பேரிடம் ரூபா 1,162,532 தொகை மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள 96 உத்தியோகத்தர்களிடம் ரூபா 251,466 தொகை அறவீடு செய்யப்பட வேண்டியிருந்தது. | நிலுவை மீதி தொடர்பாக உரிய அலுவலகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது என. | நிலுவை மீதிகளை தீர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) நிதிக் கூற்றுக்களில் நடைமுறை சொத்துக்களின் கீழ் சுமார் 10 வருட காலம் முதல் முன்கொண்டு வரப்பட்டிருந்த 04 மதிப்பளிக்கப்படாத காசோலைகளுக்கான ரூபா 240,702 தொகைக்கான மீதியொன்றினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 5865 தொகை திருத்திய நாட்குறிப்பு இலக்கம் 06 இன் மூலம் சரிசெய்யப்பட்டுள்ளது என. | - மேற்படி - |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் அடங்கியுள்ள தகவல்களின் படி சபைக்கு சொந்தமான 15 காணிகள் தொடர்பான காணி உறுதி இலக்கங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என கண்டறியப்பட்டதுடன், காணிகள் தொடர்பாக உரிமைகளை | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | ஆவணங்கள் நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| உறுதிப்படுத்துவதற்கான காணி உறுதிகள் தயாரித்துக் கொள்ளல் சபையின் அடிப்படை கருமம் ஒன்றாக இருந்த போதிலும் அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை. | | |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தலைமை அலுவலகத்தின் நிறுவன அமைப்பு முறை தயாரிப்பதற்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 922,985 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த நிறுவனத்தை தெரிவு செய்வதற்காக விலைகூறல் அழைப்பு மேற்கொள்ளும் போது அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.3.1 (இ) மற்றும் 2.6.1 அ (ii) படி நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | 02 நிறுவனங்களில் இருந்து மாத்திரம் கூறுவிலைகள் கிடைக்கப்பட்டு இருந்ததுடன் குறிப்பிட்ட இடத்தின் வரைபு சமர்ப்பிக்கப்பட்டு கூறுவிலைகள் அழைக்கப்பட்டதென குறிப்பிடுகின்றேன். விவரக் குறிப்புக்கள் உட்பட விலைகூறல் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு இருக்காததுடன் வரைபின் படி கூறுவிலைகள் சமர்ப்பிக்கும் படி அறிவிக்கப்பட்டது. தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவின் தீர்மானத்தின் மீது ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் விவரக் குறிப்புகள் தயாரிப்பதற்காக பெறுகை வழிகாட்டல் கோவையின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெறுகை வழிகாட்டல் கோவையின் படி செயற்பட வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஆரம்ப மட்டத்தில் பதவியணி வெற்றிடங்கள் 29 உம், இரண்டாம் மட்டத்தில் 4 பதவிகளில் 7 வெற்றிடங்களும், சிரேஷ்ட மட்டத்தில் 2 பதவிகளில் 2 வெற்றிடங்களும் காணப்பட்டது. | வெற்றிடங்கள் நிரப்புதல் தொடர்பாக பதவியணி அறிக்கை 2023.03.31 திகதி பிரதான செயலாளர் (மே.மா) இற்கு அனுப்பபட்டது. நிலவுகின்ற கனிஷ்ட ஊழியர் வெற்றிடங்கள் உள்ளூராட்சி ஆணையாளர் (மே.மா) இலக்கம் LGD/2G/வெற்றிடம்/பொது/2021 மற்றும் 2021.08.16 திகதிய கடிதத்தின் படி நடவடிக்கை எடுப்பதற்காக தீர்மானிக்கப்பட்டுள்ளது என. | வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |